සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

රජයේ භාෂා පරිවර්තක සේවයේ 1 වැනි පන්තියේ නිලධාරීන් සඳහා වන කාර්යක්ෂමතා කඩඉම් විභාගය - 2013 (2015)

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2013 (2015)**

Efficiency Bar Examination for Officers in Class I of the Government Translators' Service - 2013 (2015)

**2 - (I) தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தல்**

Translation from Tamil into Sinhala

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

- **சிங்களத்திற்கு மொழிபெயர்க்க.**

**1.** முக்கியமாக அரச துறையின் தனிமையுடைமையாக இருக்கும் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியானது கேள்வியை ஈடுசெய்ய முடியாமல் இருத்தல் மற்றும் தொழிற்சந்தைக் கேள்விக்கு ஒத்துச்செல்லும் விதத்தில் தரமான கல்வியை வழங்க முடியாமல் இருத்தல் ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்படுகின்றது. உயர் கல்வியில் தனியார் துறையின் பங்கேற்பு, வருமானம் குறைந்த மாணவர்களின் உயர் கல்விக்கான வாய்ப்பினை மறுத்துவிடும் என்ற காரணத்தினைக் காட்டி பல தசாப்தங்களாக எதிர்க்கப்பட்டு வருகின்றது. எனினும், இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களின் முறைமையில் போதுமான இடவசதிகள் இல்லாமையின் காரணமாக நிதியியல் வசதிகள் கொண்டவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதன் விளைவாக பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்கிறது. இப்பின்னணியில், உயர் கல்வித்துறையை தனியார்துறைக்கு திறந்து விடப்படுமென அரசு தெளிவாக வெளிப்படுத்தியதுடன் அதனூடாக இலங்கையில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியது. பொருத்தமான ஒழுங்குவிதிகள், பட்டக் கற்கை நெறிகளை மதிப்பீடு செய்து சான்றுப்படுத்தத் தேவையான கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதினூடாக புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களை கவர்வதினூடாக இப் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களையும் கவர முடியும்.

நாட்டின் உயர் கல்வித் துறையில் தனியார் முதலீடுகள் ஊக்குவிக்கப்படுகின்ற வேளையில் ஏற்கனவேயுள்ள பல்கலைக்கழக முறைமையில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும். அவ்வாறு செய்யும் பொழுது வரையறுக்கப்பட்ட இறைவசதிகள் காரணமாக பண்புத்தரமிக்க உயர்கல்விக்கு நிதியிடுவதற்கு மாற்று மூலங்களைக் கண்டறிவதும் முக்கியமானதாகும். இந்நோக்கத்திற்காக, தற்போதைய நிருவாக மற்றும் நிதியியல் ஒழுங்குவசதிகளை மீளாய்வு செய்யும் தேவையும் கல்வித் தரங்கள், தரம் மற்றும் பரீட்சை ஒருங்கிணைப்பு என்பனவற்றை விட்டுக் கொடுக்காமல் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளும் தேவையும் காணப்படுகின்றன. அரச பல்கலைக்கழகங்கள் குறிப்பிடத்தக்களவு சுயநிர்ணயத்தினைக் கொண்டிருக்கின்ற போதும், நிருவாகத் தடைகள் ஆலோசனை, ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வருவாய் உருவாக்கங்களை குறைத்து விடுகின்றன. பல்கலைக்கழகக் கல்வி தொழில் முயற்சியாளர் சார்ந்ததாக இருக்கும் தன்மை, மாற்று நிதியிடலுக்கான இன்னொரு சாத்தியமான வழியாகவும் அதே போன்று மற்றை நாடுகளிலிருந்து வெளிநாட்டு மாணவர்களை கவரக்கூடியதாகவும் இருக்கும். நாட்டில் தனியார் பொதுக்கல்வி முறை விரிவடைந்து வருகின்றபோதும் கூட, தனியார் கல்வி நிறுவனங்களிலிருந்து வரும் மாணவர்களை பொருத்தமான செலவு பங்கீட்டுப் பொறிமுறையொன்றின் ஊடாக அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு பொருத்தமான பிரமாணங்களை இனிமேல் தான் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதே சமயம் அரச பல்கலைக்கழகங்களிடையே போட்டித் தன்மையினை ஏற்படுத்துவதற்காக தரத்தினை உறுதிப்படுத்துகின்ற தரமிடல் முறையொன்றினை அறிமுகப்படுத்துவது முக்கியமானதாக இருப்பதுடன் அத்தகைய போட்டித்தன்மையானது அரச பல்கலைக்கழகங்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி சிறப்புக்களுக்கும் வழிவகுக்கும்.

இலங்கையில் உயர் கல்வித் துறையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாண்டுப் பகுதியில் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் தர உறுதிப்பாடு மற்றும் தத்துவ சபையின் உதவியுடன் விண்ணப்பம் மற்றும் மதிப்பிடல் நடைமுறைகளுக்கான புதிய படிவங்களை பின்பற்றுவதன் மூலம் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை அங்கீகரிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்தியது. மேலும் தொடர்பான பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் வெளிநாட்டு பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் வெளிநாட்டுப் பாட நெறிகளையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டது. மேலும், உயர் கல்வித் துறையில் தனியார் துறை பங்கேற்பதனை ஒழுங்குமுறைப்படுத்தி வசதிப்படுத்துவதற்காக அரச மற்றும் அரசல்லா உயர் பட்டம் வழங்குகின்ற நிறுவனங்களுக்கு பட்டம் வழங்குகின்ற அந்தஸ்தினை வழங்குகின்ற வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. அதே வேளையில், உயர் கல்வித் துறையின் தர உறுதி நிகழ்ச்சித்திட்டம் 2010 இலும் தொடர்ந்து காணப்பட்டது.

**2.** (அ)

இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில், மோதலுக்குப் பின்பான சமாதானச் சூழல் காரணமாக 2010 இல் பலமாக மீள் எழுச்சியடைந்தது. 2010 இல் மொத்தச் சுற்றுலா வருகைகள் 654,476 ஆக விளங்கி 2004 இல் பதிவு செய்யப்பட்ட முன்னைய உச்ச மட்டமான 566,202 வருகைகளை விஞ்சியது. நாட்டில் மேம்பாடடைந்த பாதுகாப்பு

[ பக். 2 ஐப் பார்க்க

நிலைமை காரணமாக ஐக்கிய அமெரிக்க நாடு, ஐக்கிய இராச்சியம், சேர்மனி, அவுஸ்திரேலியா மற்றும் யப்பான் போன்ற சுற்றுலாப் பயணிகள் வரும் பிரதான நாடுகளால் வழங்கப்பட்ட அனைத்துப் பயண ஆலோசனைகளும் தளர்த்தப்பட்டமையாலும் சிறந்த பயண சேரிடங்களில் ஒன்றாக இலங்கை உள்ளதென உலகில் தரம் வாய்ந்த நிபுணர்களால் வழங்கப்பட்ட பாராட்டுக் காரணமாகவும் சுற்றுலா வருகைகள் கூர்மையான அதிகரிப்பை ஏற்படுத்தின. வருகைகளின் மிகக் கூடிய எண்ணிக்கை இந்தியாவிலிருந்தும் (126,882) அதைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (105,496) சேர்மனி (45,727) மாலை தீவு (35,791) அவுஸ்திரேலியா (33,456) மற்றும் பிரான்சிலிருந்தும் (31,285) பதிவு செய்யப்பட்டன. மத்திய கிழக்கு நாடுகளிலிலிருந்தான சுற்றுலா வருகைகளும் அதிகரித்தன. இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் கிட்டத்தட்ட 78.9 சதவீதமானோர் விடுமுறை நோக்கங்களுக்காகவும் 12.7 சதவீதமானோர் வர்த்தக நோக்கத்துக்காகவும் 5.4 சதவீதமானோர் நண்பர்கள் மற்றும் உறவினர்களைக் காண்பதற்காகவும் 0.8 சதவீதம் மத ரீதியான மற்றும் கலாசார நோக்கங்களுக்காகவும் வருகை தந்திருக்கையில் 1.0 சதவீதமானோர் மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்காக வருகை தந்தனர்.

சுற்றுலாவிலிருந்தான வருகைகள் 2009 இன் ஐ.அ.டொலர் 350 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இல் ஐ.அ.டொலர் 576 மில்லியனுக்கு 64.6 சதவீதத்தால் அதிகரித்தன. இலங்கை சுற்றுலாத்துறையை உயர்மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு பாரிய விரிவான நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் சுற்றுலா வருகைகள் இவ்வாண்டில் தொடர்ச்சியாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை சுற்றுலா 2011 ஆம் ஆண்டினை "இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள்" ஆண்டாகப் பிரகடனப்படுத்தி இருக்கின்றமையினால் நாட்டின் பன்முகப்படுத்தப்பட்ட கவரும் தன்மைகளை காட்சிப்படுத்தும் விதத்தில் 12 மாதங்களுக்கும் 12 சுற்றுலாத் தொனிப்பொருட்களை உள்ளடக்குகின்ற ஊக்குவிப்புப் பிரச்சாரமொன்றை ஆரம்பித்தது. பாசிக்குடா, அறுகம்குடா, திருகோணமலை, நிலாவெளி, வாகரை, வெருகல் மற்றும் கல்குடா போன்ற மிகப்பிரபல்யம் பெற்ற சுற்றுலா அமைவிடங்கள் சிலவற்றில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பிலும் அதேபோன்று சுற்றுப்புறங்களிலும் பன்னாட்டு ரீதியில் புகழ்பெற்ற பல சுற்றுலா விடுதிகளை அமைப்பதற்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டதுடன் ஏனைய புகழ்பெற்ற சுற்றுலா விடுதி தொடர்களைக் கவர்கின்ற செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இலங்கையைக் கவர்ச்சிகரமான கொள்வனவுச் சந்தையிடமாக நிறைநிறுத்தும் முன்மொழிவுகளுக்கு உதவும் விதத்தில் சீன நிறுவனமொன்று கொழும்பின் மத்தியில் பாரியளவு சுற்றுலா விடுதி / பொருள் கொள்வனவுக் கட்டடத் தொகுதியில் முதலீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) பாடசாலையில் எவரும் திஸ்ஸவை விரும்புவர். வகுப்பு மாணவர்களுள் ஒருவனைத் தவிர ஏனையோர் திஸ்ஸவை விரும்பினர். எனினும் திஸ்ஸ தனது நம்பிக்கைக்குரிய நண்பன் எனக் கருதக்கூடிய ஒருவரும் அவர்களுள் இருக்கவில்லை. திஸ்ஸவை நம்பிக்கைக்குரிய நண்பனாகக் கருதுவதற்கு விரும்பிய மாணவர்கள் பலர் அவனது வகுப்பில் இருந்தனர். அதிக வெட்கத்தினாலும் அச்சத்தினாலும் பீடிக்கப்பட்ட திஸ்ஸவிடமிருந்து ஊக்கம் கிடைக்கப் பெறாததினால் அவர்கள் அவ்விருப்பை அடக்கிக் கொண்டனர். தனது வகுப்பில் உள்ள மாணவர்களுள் ஒருவனிடம் திஸ்ஸவுக்குச் சிறப்பான அன்பு ஏற்பட்ட போதிலும், அம்மாணவனோ வேறொருவரோ அது பற்றி அறிந்து கொள்ளும் வகையில் ஒன்றும் கூறவுமில்லை. செய்யவுமில்லை. திஸ்ஸ அவ்வாறு செய்தது அம்மாணவன் தன்னை நம்பிக்கைக்குரிய நண்பனாகக் கருதுவதை விரும்பமாட்டான் என்ற உணர்ச்சியினாலேயாகும். அவ்வுணர்ச்சிக்குத் திஸ்ஸவின் அதிக நாணமே ஏதுவாகும்.

திஸ்ஸ தனது தாயைப் போன்ற மனதுடையவன். எந்தக் கருமத்திலாயினும் கெட்டிக்காரனாயிருந்தவன் திஸ்ஸவின் உள்ளத்தைக் கவர்ந்தான். திஸ்ஸ கல்வியில் போன்றே விளையாட்டிலும் கெட்டிக்காரனாவான். அவனைப்போன்றே அவனது வகுப்பிற் கல்வியிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரராயிருந்த இரண்டு மூன்று மாணவர் திஸ்ஸ வின் உள்ளத்தைக் கவர்ந்தோராயிருந்தனர். எனினும், திஸ்ஸ தனது நம்பிக்கைக்குரிய நண்பர் என்று கருதி அவர்கள் ஒருவருடனாவது நெருங்கிப் பழகவில்லை. அவன் பாடசாலையில் அவர்களை நண்பராகக் கருதுவான். வீட்டுக்குச் சென்றதும் மறந்து விடுவான். நெருங்கிப் பழகும் நம்பிக்கைக்குரிய நண்பர்கள் அற்ற திஸ்ஸ வாரத்தில் ஓய்வு நாட்கள் நெருங்கும்பொழுது ஊரையே நினைப்பான். வீட்டையே எண்ணுவான். கிராமச் சிறார்களைப் பற்றியே சிந்திப்பான். மேலே கூறிய காரணங்களினால் கிராமத்துக்கும் வீட்டுக்கும் தாயுக்கும் சகோதரிகளுக்கும் திஸ்ஸவிடம் தோன்றிய பற்று மேன்மேலும் வளரலாயிற்று.

காலிப் புகைவண்டி நிலையத்தை அடையும் வரை திஸ்ஸ ஊரைப்பற்றியே நினைத்தார். வீட்டைப் பற்றியே எண்ணினான்; தாயையும் சகோதரிகளையும் பற்றியே சிந்தித்தான். மீண்டும் ஊருக்குப் போகும் நாளைப் பற்றியே யோசித்தான். சிங்களப் புத்தாண்டு நெருங்கும் பொழுது வாரத்துக்கொருமுறை வீடு செல்லத் திஸ்ஸ விரும்புவான். தொடர்ந்து இரண்டு வாரங்கள் வீட்டுக்கு வந்தமையால் அதற்கடுத்த வாரச் சனிக்கிழமையன்று வீட்டுக்கு வரவேண்டாம் என்று அனுலா ஒருமுறை திஸ்ஸவுக்கு எழுதினாள். ஆதலினால் வீட்டுக்குச் செல்வதற்கான புகைவண்டிக் கட்டணமும் அவனுக்குக் கிடைக்கவில்லை. திஸ்ஸ அந்த வாரச் சனிக்கிழமையன்று காலையில் புறப்பட்டுக் கால் நடையாக வீட்டுக்குச் சென்றான். பத்து மைல்கள் நடந்து களைப்படைந்திருந்த திஸ்ஸவைக் கண்ட தாயின் கண்களில் கண்ணீர் தோன்றியது. பணம் அனுப்பாததையிட்டு அவள் அனுலாவைக் கண்டித்தாள்.

திஸ்ஸ காலைப்பொழுதில் கட்டிலிலே சுருண்டு கொண்டு இருந்த வண்ணமே ஆண்டவனே மழை பெய்யட்டும் என்று மனதால் சொல்லிக் கொண்டிருந்தான். எனினும் காலிப் புகைவண்டி நிலையத்தைப் புகைவண்டி அடைந்ததும், மழைமேகங்கள் அற்ற சூரிய வெளிச்சம் பிரகாசித்த ஆகாயத்தைக் கண்ட திஸ்ஸ மகிழ்வெய்தினான். பாடசாலை நண்பர்களுடன் விளையாடுவதில் விருப்பம் கொண்ட திஸ்ஸ ஊரும் வீடும் நினைவுக்கு வந்தமையாலே தோன்றிய துக்க எண்ணங்களை மனத்திலிருந்து அப்புறப்படுத்திப் புகைவண்டியிலிருந்து இறங்கினான்.

* * *